ரூ. 25 தான் கிடைக்கிறது. ஆகவே இந்த ரூ. 250 என்பது போதாது. கரும்பு விலையை ரிக்கவரி இடத்தில் வைத்தால்கூட 10 சதவீதம் கூட நமக்கு ரிக்கவரி வருகிறது. அதைக் குறைவாக காட்டுகிறார்கள். அந்த ரிக்கவரி நமக்கு நல்ல விலையில் வந்து கொண்டிருக்கிறது. கரும்பு டன் ஒன்றுக்கு 450 ரூபாய் என்றாலும், 40 கிலோ மீட்டருக்கு மேலேயிருந்து வருவதற்கு அவர்களுக்கு டிரான்ஸ்போர்ட் சார்ஜசை அதிகரித்து கொடுக்க, இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து வெட்டுக்கூலி, டிரான்ஸ் போர்ட் சார்ஜ் இவைகளை விவசாயிகளுக்குக் கொடுக்க மாண்பு மிகு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: அதைப்பற்றி வரும் ஆண்டுகளில் யோசிக்கலாம்.

4. ஒழுங்குப் பிரச்சனை—தொடர்ச்சி

கேள்வி நேரத்திற்குப் பின் கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பது குறித்து—தொடர்ச்சி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே அகடமிக் இன்ட்ரஸ்ட்தான். குற்றம் சாட்டுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சட்டமன்ற நெறிமுறைகள் பற்றி தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் செயலாளர் திரு. மா. சண்முக சுப்ரமணியம் அவர்கள் எழுதிய புத்தகத்தில், 171-வது பக்கத்தில் ஒரு மேற்கோள் வருகிறது. ''ஒத்திவைப்புத் தீர்மானம், வினா-விடை நேரமும், கவன ஈர்ப்பு மீதான அறிக்கை முடிந்த பின்னால், நடைபெறுவதாகும்'' என்று அதிலே சட்டமன்ற நெறிமுறைகள் என்ற புத்தகத்தில் திரு. சண்முகசுப்ரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நினைவு படுத்து கிறேன். இதை மேலும் ஆய்வுபடுத்துவதாக இருந்தால் ஆய்ந்து எனக்குச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நம்மிடத்தில் உள்ள சட்டமன்றப் பேரவை விதிகள் என்ற நூலின் அடிப்படையில்தான், அந்தக் கருத்துப்படிதான் அவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இது குறித்த கருத்துக்களை எடுத்துக்கொண்டு, பேரவை விதிகள் குழுவில் ஆய்ந்து தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 36-வது அறிக்கை முதல் 40-வது அறிக்கை வரை (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) இப்பேரவைக்கு அளிக்கிறேன்.